பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

04 08 2024 7 15

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. செமிகண்டக்டர் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளில் கவனம் செலுத்தி வருவதாக மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

2. உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கு மனித உறுப்புகளை கொண்டு செல்வதற்கான நிலையான வழிகாட்டு நடைமுறைகளை மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

3. சோமாலியாவில் நடத்தப்பட்ட தற்கொலைப்படைத் தாக்குதலில் 35 பேர் கொல்லப்பட்டனர். 126 பேர் காயமடைந்தனர்.

4. ஜார்கண்ட், சத்தீஸ்கட் உள்ளிட்ட வடமாநிலங்களின் பெரும்பாலான பகுதிகளில் இன்றும் நாளையும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. பாரீஸ் ஒலிம்பிக் ஹாக்கிப் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

செமிகண்டக்டர் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளில் மத்திய அரசு கவனம் செலுத்தி வருவதாக மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அசாம் மாநிலம் மோரேகானில் தனியார் செமிகண்டக்டர் உற்பத்தி ஆலை அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

27 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் இந்த ஆலை ஏற்படுத்தப்பட உள்ளதாகவும், இதன் மூலம் 15 ஆயிரம் நேரடி வேலைவாய்ப்புகளும், 13 ஆயிரம் மறைமுக வேலைவாய்ப்புகளும் உருவாகும் என்று அவர் கூறினார்.

இந்த ஆலையில் நாளொன்றுக்கு நான்கு கோடியே 83 லட்சம் செமிகண்டக்டர் சில்லுகள் உற்பத்தி செய்யப்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த ஆலையில் உற்பத்தி செய்யப்படும் செமிகண்டக்டர்கள், மின்சார வாகனங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப கட்டமைப்புப் பணிகளில் பயன்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

மக்களுக்கு எளிதாகவும், விரைவாகவும் நீதி கிடைக்கச் செய்யும் நோக்கில் சிறப்பு மக்கள் நீதிமன்றங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இதன்படி உச்சநீதிமன்றம் ஏற்பாடு செய்திருந்த ஒருவார கால மக்கள் நீதிமன்றப் பணிகள் நேற்றுடன் முடிவடைந்தது.

நாட்டின் 75வது சுதந்திர தின கொண்டாட்டத்தின் ஒருபகுதியாக நீண்டகாலமாக நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு சமரச தீர்வு காணும் வகையில் இதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன் நிறைவுநாள் நிகழ்ச்சியில் உரையாற்றிய மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மேக்வால், இந்த மக்கள் நீதிமன்றங்கள் மூலம் ஆயிரத்துக்கும் அதிகமான வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக கூறினார்.

மத்தியஸ்த நடவடிக்கைகள் மூலம் பிரச்சினைளுக்கு தீர்வு காண்பது நாட்டின் கலாச்சாரத்தின் ஒரு அங்கமாக உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

உரிமையியல், நிலம் மற்றும் திருமணம் தொடர்பான வழக்குகளுக்கு இதில் தீர்வு காணப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

<<<<>>>>

உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கு மனித உறுப்புகளை கொண்டு செல்வதற்கான நிலையான வழிகாட்டு நடைமுறைகளை மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

இந்த வழிகாட்டு நெறிமுறைகள் நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கான சிறந்த நடைமுறைகளையும், தரத்தையும் உறுதி செய்யும் என்று சுகாதாரத்துறை செயலாளர் திரு. அபூர்வசந்திரா தெரிவித்துள்ளார்.

எண்ணற்ற நோயாளிகளின் உயிரைப் பாதுகாக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்குத் தேவையான உடல் உறுப்புகளை பாதுகாப்பாக கொண்டு செல்லும் வகையில் இந்த நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வழிகாட்டு நெறிமுறைகள் நிதி ஆயோக், சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் மற்றும் போக்குவரத்து துறை சார்ந்த நிபுணர்களின் ஆலோசனைப்படி உருவாக்கப்பட்டுள்ளதாக திரு. அபூர்வசந்திரா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஜார்கண்ட், சத்தீஸ்கட், மத்தியப்பிரதேச மாநிலங்களில் இன்று அதிகனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேகாலயா, மகாராஷ்டிர மாநில மலைப்பகுதிகள், கொங்கன் மற்றும் கோவாவில் நாளை வரை கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

ஹிமாச்சலப்பிரதேசம், உத்தராகண்ட், உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான், மேற்குவங்கம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் இம்மாதம் 10ஆம் தேதி வரை மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே கர்நாடக மாநிலத்தின் கடலோர பகுதிகள், கேரளா, மாஹே மற்றும் தமிழகத்தின் ஒருசில இடங்களில் நாளை வரை கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

நாட்டில் உள்ள பெரும்பாலான இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சோமாலியாவில் நடத்தப்பட்ட தற்கொலைப்படைத் தாக்குதலில் 35 பேர் கொல்லப்பட்டனர். 126 பேர் காயமடைந்தனர்.

அந்நாட்டின் தலைநகர் **Mogadishu**-வில் உள்ள விடுதியின் பின்புறத்தில் குண்டுவெடிப்பு மற்றும் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவத்திற்கு அல்-சபாப் மற்றும் அல்காய்தா தீவிரவாத அமைப்புகள் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளன.

இதனிடையே செய்தியாளர்களிடம் பேசிய அந்நாட்டு காவல்துறை செய்தித்தொடர்பாளர் திரு. **Abdifatah Adan Hassan**, பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 5 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளதாக கூறினார்.

விடுதியில் தங்கியிருந்த மக்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாகவும், ஒரு காரில் நிரப்பப்பட்டிருந்த வெடிகுண்டுகளை பாதுகாப்புப் படையினர் செயலிழக்கச் செய்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த தாக்குதல் சம்பவத்திற்கு அந்நாட்டுப் பிரதமர் திரு. **Hassan Ali Kahire** கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் 20 ஆண்டுகளாக நிலுவையில் உள்ள 17 ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி திட்டத்தை செயல்படுத்த, உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று பாமக தலைவர் திரு. அன்புமணி ராமதாஸ் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நீர்மேலாண்மை மற்றும் விவசாயத்திற்கு மாநில அரசு முக்கியத்துவம் அளிக்கவில்லை என்று குற்றம் சாட்டினார்.

காவிரி ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்ட மாநில அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

போதைப்பொருள் நடமாட்டத்தை தடுப்பது, இலங்கை கடற்படையிடம் இருந்து தமிழக மீனவர்களை பாதுகாப்பது, சாதிவாரி கணக்கெடுப்பு உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை மாநில அரசு விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்று திரு. அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

ஹிமாச்சலப்பிரதேச மாநிலத்தில் மேகவெடிப்பு காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

ஷிம்லா மற்றும் மண்டி மாவட்டங்களில் மீட்பு பணிகளில் ராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

90க்கும் அதிகமான மக்கள் ராணுவ மருத்துவ முகாம்களில் தங்கவைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

நிலச்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு உணவு, அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளில் கூடுதல் ராணுவ வீரர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

உத்தராகண்ட் மாநிலத்தில் பேரிடரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் டேராடூனில் நடைபெற்ற உயரதிகாரிகள் கூட்டத்தில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு அம்மாநில முதலமைச்சர் திரு. புஷ்கர்சிங் தமி அறிவுறுத்தியுள்ளார்.

கேதார்நாத்தில் சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பணிகளை விரைந்து மேற்கொள்ளுமாறு அதிகாரிகளை அவர் கேட்டுக்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கேதார்நாத்திற்கு வரும் பக்தர்களின் பாதுகாப்பிற்கு அம்மாநில அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாகக் கூறினார்.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் சேதமடைந்த சாலைகள் மற்றும் கட்டிட இடிபாடுகளை சீரமைக்கும் பணிகள் விரைவில் முடிக்கப்படும் என்று திரு. தமி தெரிவித்தார்.

<<<<>>>>

கேரள மாநிலம் வயநாட்டில் நிலச்சாரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது 16 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

தேடுதல் நடவடிக்கைகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்களின் மறுவாழ்வுக்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறினார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பான இடத்தில் புதிய குடியிருப்பு வசதிகள் அமைத்து தரப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.

நிவாரண முகாம்களில் 10 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மலப்புரம் மாவட்டம் நிலம்பூர் பகுதியில் உள்ள சாளியார் ஆற்றில் இருந்து 67 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களைத் தேடும் பணிகள் அதிநவீன ரேடார் கருவியின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

பாரீஸ் ஒலிம்பிக் ஹாக்கிப் போட்டிக்கான காலிறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறுகின்றன.

இன்று நடைபெறும் காலிறுதிப் போட்டியில் இந்தியா - இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

இதர காலிறுதி ஆட்டங்களில் பெல்ஜியம் - ஸ்பெயினையும், நெதர்லாந்து – ஆஸ்திரேலியாவையும், ஜெர்மனி – அர்ஜென்டினாவையும் எதிர்கொள்கின்றன.

ஆடவர் ஒற்றையர் பிரிவு பேட்மிட்டன் போட்டியின் இன்று நடைபெறும் அரை இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் லக்ஷயா சென் - டென்மார்க்கின் விக்டர் அக்சல்சென்-ஐ எதிர்கொள்கிறார்.

குத்துச்சண்டைப் போட்டியில் மகளிர் 75 கிலோ எடைப்புரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் லவ்லினா போர்கோகைன் - சீனாவின் **Li Qian**-ஐ எதிர்கொள்கிறார்.

ஆடவர் 25 மீட்டர் ராப்பிட் துப்பாக்கி சுடும் போட்டியின் தகுதிச் சுற்று ஆட்டங்களில் இந்தியாவின் அனீஷ் பன்வாலா மற்றும் விஜய்வீர் சித்து ஆகியோர் பங்கேற்கின்றனர்.

மகளிர் 3 ஆயிரம் மீட்டர் ஸ்டீப்பிள் சேஸ் ஓட்டத்தின் முதல் சுற்றுப் போட்டியில் இந்தியாவின் பாருல் சௌத்ரியும், ஆடவர் நீளம் தாண்டுதலில் ஜெஸ்வின் ஆல்ட்ரினும் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையேயான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெற உள்ளது.

கொழும்பில் நடைபெறும் இப்போட்டி இந்திய நேரப்படி பிற்பகல் 2.30 மணிக்கு தொடங்குகிறது.

3 போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் முதல் போட்டி வெற்றி தோல்வியின்றி டை-யில் முடிவடைந்தது.

<<<<>>>>

போர்ச்சுகலில் நடைபெற்ற சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - இங்கிலாந்தின் **Joshua Paris** இணை தோல்வியடைந்தது.

**<<<<The End>>>>**